**<u>சுருக்கம்</u>**

வணிகவரித்துறை – தமிழ்நாடு வணிகர்நல வாரியம் – மருத்துவ உதவி திட்டம் – உறுப்பினர்களுக்கு இருதய அறுவை சிகிச்சை, புற்றுநோய் அறுவை சிகிச்சை ஆகியவற்றிற்கு உதவித்தொகை உயர்த்தி வழங்குதல் – கர்ப்பப்பை அறுவை சிகிச்சை, டயாலிசிஸ், செமோதெரபி, ரேடியேஷன் தெரபி மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி (Dialysis, Chemotherapy, Radiation therapy and Angioplasty) ஆகிறவற்றிற்கு உதவித் தொகை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (டி2) துறை**

**அரசாணை (2டி) எண்.97** **நாள் : 2.07.2007**

**படிக்கப்பட்டது**

தமிழ்நாடு வணிகர்நல வாரிய முதன்மை செயல் அலுவலர் கடித எண். வநவா/203/2007, நாள் 25.04.2007.

**–oOo–**

**ஆணை:**

2007–2008ஆம் ஆண்டு வணிகவரிகள் குறித்த மானியக் கோரிக்கையின்போது, வணிகர்நல வாரிய உறுப்பினர்களுக்கு இருதய அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு மருத்துவச் சான்றிதழின்பேரில் தற்போது ரூ.25000/– வழங்கப்பட்டு வருகிறது என்றும் இதனை ரூ.50000/– ஆக உயர்த்தி வழங்கப்படும் என்றும் மேலும் பெண் உறுப்பினர்களுக்கு கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு ரூ.20000/– வழங்கப்படும் என்றும் நடைமுறையிலுள்ள டயாலிசிஸ் செமோதெரபி, ரேடியேஷன் தெரபி மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி (Dialysis, Chemotherapy, Radiation therapy and Angioplasty) ஆகிய மருத்துவச் சிகிச்சைகளுக்கு ரூ.15000/– தொடர்ந்து வழங்கப்படும் என்றும் சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

2. பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்கண்ட அறிவிப்பு குறித்து வாரிய முதன்மை செயல் அலுவலர் அவர்கள், கீழ்க்கண்டவாறு அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

> இம்மருத்துவ உதவி கோரும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட வரிவிதிப்பு அலுவலகம் மூலமாக, மருத்துவச் சான்று, வருமானச் சான்று மற்றும் உறுப்பினர் சான்றுடன் அனுப்பப்படவேண்டும் என்றும் இது குறித்து உரிய வரிவிதிப்பு அலுவலர் விண்ணப்பத்தினை ஆய்வு செய்து தகுந்த பரிந்துரையுடன் வணிகரின் வறிய சூழ்நிலையை அறிய, வட்டாட்சியரிடமிருந்து

பெறப்பட்ட வருமான சான்றினையும் பெற்று அனுப்பவேண்டும் என்றும், வருமான வரி செலுத்தும் அளவிற்கு வருமானம் இருக்கக் கூடாது என்றும் நிபந்தனைகளை விதித்து சட்டமன்றப் பேரவையின் அறிவிப்பிற்கிணங்க வணிகர்நல வாரிய உறுப்பினர்களுக்கு இருதய அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு வழங்கப்படும் ரூ.25000/–ஐ ரூ.50000/– ஆக உயர்த்தலாம் என்றும் பெண் உறுப்பினர்களுக்கு, கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு ரூ.20000/– வழங்கலாம் என்றும் நடைமுறையிலுள்ள டயாலிசிஸ் செமோதெரபி, ரேடியேஷன் தெரபி மற்றும் ஆஞ்சியேபிளாஸ்டி (Dialysis, Chemotheropy, Radiation theropy and Angioplasty) ஆகிய மருத்துவச் சிகிச்சைக்காக ரூ.15000/– தொடர்ந்து வழங்கலாம் என்றும் இவ்வாரியத்தின் மூலமாக மருத்துவ நிதியுதவி ஆண்டொன்றுக்கு 15 நபர்களுக்கு (அதாவது நபர் ஒருவருக்கு அறுவை சிகிச்சைக்காக ரூ.50000/– வீதம் உயர்த்தி வழங்கினால் 10 நபர்களுக்கு ரூ.5.00 இலட்சமும், மற்றும் மருத்துவ சிகிச்சைக்காக ரூ.15,000/– வீதம் 5 நபர்களுக்கு ரூ.75000/–மும்) வழங்கினால் ஆண்டிற்கு உத்தேசமாக 5.75 இலட்சம் செலவினம் ஏற்படும் என்றும் இச்செலவினை தற்போது வாரிய கணக்கில் உள்ள இருப்புத் தொகையிலிருந்து வழங்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

3. முதன்மை செயல் அலுவலரின் கருத்தினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று, மேலே பத்தி 2–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் இவ்வரசாணை வெளியிடப்பட்ட தேதிக்குப் பின்னர் பெறப்படும் மனுக்களுக்கு இருதய அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சை ஆகியவற்றிற்கு வழங்கப்படும் மருத்துவ நிதியுதவியான ரூ.25000/– ஐ ரூ.50000/– ஆக உயர்த்தியும் பெண் உறுப்பினர்களுக்கு கர்ப்பப்பை அறுவைச் சிகிச்சைக்கு ரூ.20000/– வழங்கவும், நடைமுறையிலுள்ள டயாலிசிஸ் (Dialysis), கிமோதெரபி (Chemotheropy), ரேடியோதெரபி (Radiotheropy) மற்றும் ஆஞ்சியேபிளாஸ்டி (Angioplasty) ஆகிய மருத்துவ சிகிச்சைகளுக்கு ரூ.15000/– தொடர்ந்து வழங்கவும் அரசு ஆணையிடுகிறது. இந்த உதவி பெற்ற பிறகு அறுவை சிகிச்சை செய்ய நேர்ந்தால் மேலும் ரூ.25000/– வரை மீண்டும் உதவி பெற நோயாளி (வாரிய உறுப்பினர்) தகுதி உடையவராகிறார். இந்த ஆணை உடனடியாக அமுலுக்கு வருகிறது. இச்செலவினத்தை தமிழ்நாடு வணிகர் நல வாரியம் ஏற்கும்.

4. இது குறித்து தொடர் நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைச் செயல் அலுவலர் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தை அரசு பணிக்கிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். தேவராஜ்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு வணிகர் நல வாரியம், சென்னை–5.
வணிகவரி ஆணையர், சென்னை–5.
மாநிலக்கணக்காயர், சென்னை–6/9/18/35.

நகல்

வணிகவரித்துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9
நிதித்துறை, சென்னை–9.
இ.கோ./உதிரி

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.